[1974 மார்ச் 27

மதுரை-மண்டபம் நெடுஞ்சாலை

*633 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமனாதபுரம் மாவட்டம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையின் அருகில் வைகை ஆறு வருவதால் தட்டாங் குளத்திலிருந்து மார்நாட்டு கால்வாய் முகப்பு வரையிலும் பல இடங்களில் ரோடு அரிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், அரிப்பு ஏற்படாமல் இருக்க முண்டுகள் வைத்து தடுப்புச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம்.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையின் அருகில் தட்டாங்குளத்திலிருந்து மார்நாட்டு கால்வாய் வரையிலும் அந்த ரோடுகளுக்கு அருகில் வைகை ஆறு ஓடுவதால் அடிக்கடி வைகையிலே பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் ரோடுகளும் சேதப்படுகின்றன. ஆகவே, அப்படித் தண்ணீரில் அடிபட்டு அடிக்கடி சேதம் ஏற்படாத வகையில் அங்கே ஒரு தாங்குசுவர் அல்லது ரிவெட்மெண்ட் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1,81,400 ரூபாய் செலவில் இதைச் செய்யலாம் என்று கருதி எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒப்புதல் கொடுத்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

கொல்லிமலையில் நில ஒப்படை

***634 வினா—திரு. சி. சின்னவெள்ளையன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதி, கொல்லிமலையில் எத்தனை பேர்களுக்கு இதுவரை நிலப் பட்டா கொடுக்கப்பட் டுள்ளது?

1974 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேந்தமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதி, கொல்லிமலையில் 1947-ம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 3,986.14 ஏக்கர் நிலம் 2,003 பேர்களுக்கு, பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, பட்டா வழங்கியதில் அரிசனங்களுக்கு எத்தனைபேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மொத்தம் எத்தனைபேர்களுக்கு என்றுதான் இருக்கிறது. தனியாக அரிசனங்களுக்கு என்ற புள்ளிவிவரம் இல்லை.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, கொல்லிமலையில் எவ்வளவு ஏக்கர்கள் இன்னும் பட்டா கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதற்கென்று தனியாக ஒரு கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் தருகிறேன் .

இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வரும் நிலங்கள்

*635 வினு—**திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இனம் ஒழிப்புச் சட்டம் 26/63-ன் படி நேரடி சாகுபடி இல்லாத நிலங்களை எடுத்துக்கொள்ள அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) (தமிழ்நாடு சட்டம் 26/1963) சட்டத்தின்கீழ் பட்டா பெறுவதற்கான எல்லா நேர்வுகளிலும் நிலம் சொந்தச் சாகுபடியில் இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி சட்டத்தின் 9-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள கால அளவில் தமது சொந்தச் சாகுபடியில் இருந்ததாக மெய்ப்பிப்பாராயின் நிலத்தை வைத்திருப்பவர்கள் நிலப்பட்டா பெறுவதற்குத் தகுதி